தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை

# தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம்



## திட்ட அறிமுகம் :

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் (TNRTP) உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் ஒரு முன்னோடி திட்டமாகும். இத்திட்டம் தொழில் மேம்பாடு, மூலம் வளத்தையும் அதன் நிலைத்த மற்றும் நிடித்த தன்மையும் உருவாக்கி ஊரக பகுதிகளில் தொழில் வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் உருவாக்க செயல்படுத்தப்படும் ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டமாகும்.

## “ நோக்கங்கள்

*1. ஊரகத்தொழில் முனைவுகளை உருவாக்குதல்,*
*2. நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் மற்றும்*
*3. வேலைவாய்ப்பினை உருவாக்குதல்* ”

**திட்ட செயலாக்கம்**
**30 மாவட்டங்கள்**
**120 வட்டாரங்கள்**
**3994 ஊராட்சிகள்**

## திட்ட பயனாளிகள்:

முந்தைய திட்டங்களால் உருவாக்கப்பட்ட சொத்துக்கள், வளங்கள் மற்றும் திறன்களைக் கொண்ட சுய உதவிக் குழு உறுப்பினர்களின் குடும்பங்களே இத்திட்டத்தின் முதன்மை இலக்கு பயனாளிகள் ஆவர்.



## இத்திட்டத்தில் முக்கியத்துவம்

– பெண்கள்,
– ஆதிதிராவிடர்,
– பழங்குடியினர்,
– மாற்றுத் திறனாளிகள்,
– இளைஞர்கள் மற்றும்
– ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் உள்ள வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாரா துறைகளைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் இணைந்த குழு, கூட்டமைப்புகள் மற்றும் தொழில் முனைவோர்கள் ஆகியோர் பயனாளிகள் ஆவர்.

## மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் (PGP):

திட்டத்தின் கீழ் உள்ள ஊரகப் பகுதிகளில் தொழில் நிறுவனங்கள் மற்றும் புதிய தொழில் முனைவுக்கான வாய்ப்புகளை கண்டறிந்திடவும். ஊரக அளவிலான கணக்கெடுப்பு மற்றும் மக்கள் பங்கேற்புடன் கூடிய இலக்கு நோக்கிய குழு கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தி கிராம முதலீட்டுத் திட்டம் தயார் செய்ய நடைபெறும் கணகெடுப்பு மற்றும் திட்டமிடலாகும். இச்செயல்பாடு ஊராட்சி அளவில் 8 முதல் 12 நாட்கள் நடத்தப்படும்.

இத்திட்டமிடுதல் மூலம் தற்போது சமுதாயத்தில் நடைமுறையில் உள்ள வாழ்வாதாரங்களை, புதிய முயற்சிகளை கண்டறியும் வகையில் தேவையான தகவல் திரட்டுதல், உண்மைக் காரணிகள் அறிதல் மற்றும் தொழில் முனைதலில் பல்வேறு பங்காளர்களை இணைத்தல் ஆகியவற்றின் மூலம் கிராம முதலீடு திட்டம் உருவாக்குதல் ஆகும்.

சமுதாய வல்லுநர்கள் மற்றும் கிராமப்புற பிரதிநிதிகளால் இதற்கென உருவாக்கப்பட்ட பிரத்தியேக “வளம்” கைபேசி செயலி மூலம் தகவல்கள் சேகரிக்கப்படும்.



## குழு அமைத்தல்

| | |
|---|---|
| சமூக வல்லுநர்(CP) | 3 பேர் |
| சுய உதவிக் குழு பிரதிநிதி | ஒருவர் |
| கிராம வறுமை ஒழிப்புச் சங்கப் பிரதிநிதி | ஒருவர் |
| ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு (மகளிர்) | ஒருவர் |
| கிராமத்தில் உள்ள தொழில் முனைவோர் | ஒருவர் |

**7** உறுப்பினர்களை உள்ளடக்கியது.

இக்குழுவில் குறைந்தது 4 பெண் பிரதிநிதிகள், ஒரு தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் குக்கிராம பிரதிநிதிகள் இடம்

ஒரு குழுவானது குறைந்தது 5 ஊராட்சிகளில் திட்டம் தயார் செய்யும் பணிகளை மேற்கொள்ளும். இக்குழுவில் சமூக வல்லுநர்களைத் தவிர மற்ற பிரதிநிதிகள் அந்தந்த ஊராட்சி அளவில் செயல்படும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஒரு தொழில் முனைவோர் இருப்பார்கள்.

## திட்டம் தயாரித்தல்


01 கிராம நடை பயணம் – தகவல் சேகரித்தல் மற்றும் பரிமாற்றத்திற்கான நடை

02 ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுடன் கூட்டம் நடத்துதல்

03 இலக்கு நோக்கிய குழு கலந்துரையாடல்

04 கிராம ஊராட்சி முதலீட்டுத் திட்டம்

## கிராம அளவிலான தகவல் சேகரிப்பு :



1. இரண்டாம் நிலைத் தகவல்கள்
   • கிராமத்தின் மக்கள் தொகை விவரங்கள்
   • கிராமத்தின் நிலம் தொடர்பான தகவல்கள் (கிராம நிர்வாக அலுவலர், கிராம ஊராட்சி செயலர் ஆகியோரிடம் இத்தகவல்களைப் பெறலாம்)
2. வட்டார அளவிலான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு விவரங்கள்
   • சமூகக் கட்டமைப்பு விவரங்கள்
   • வட்டார வரைபடம்
   • வேளாண்மை சார்ந்த தகவல்கள்
   • தோட்டக் கலை சார்ந்த தகவல்கள்
   • கால்நடை பராமரிப்பு சார்ந்த தகவல்கள்
3. மாவட்ட அளவிலான விபரங்கள்
4. மாவட்ட பகுப்பாய்வு (DDS) சுருக்கமாகவும், மதிப்பு தொடர் சங்கிலி ஆய்வு விவரம். கிராம அளவிலான தகவல் சேகரிப்பு

## தகவல் தொடர்பு தொழில் நுட்பம்




மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டக் குழுவினர் தாங்கள் பெறும் தகவல்களை கைபேசி செயலி மூலம் (ஆடிடைந யயீயீடைஉயவடைிே) பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். இப்பதிவேற்றம் செய்வதற்கு சமூக வல்லுனர், சமுதாய வளப் பயிற்றுநர் (மிஷன் அந்தியோதயா) பொறுப்பாவர்.

கைபேசி செயலி போன்ற தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தின் மூலம் இக்கூறின் முழுமையான வெளிப்படையான அறிக்கைகள் மற்றும் புள்ளி விபரங்கள் கிராம, வட்டார, மாவட்ட மற்றும் மாநில அளவில் அறிவதற்கு வழிவகை செய்யப்படுகிறது.



## கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் பொறுப்புகள்

- மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட தயாரிப்பு அணியினரை அடையாளம் காண திட்ட அணிகளுக்கு உதவி செய்தல்.

- ஊராட்சி அளவில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தொடர்பான பயிற்சிகளில் கலந்து கொள்ள வழிகாட்டியாக இருத்தல்.

- கிராம அளவில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தலுக்கு திட்ட அணியினருடன் இணைந்து திட்டமிடல்.

- சமூக வல்லுநர்களைக் கண்டறிதல், மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரித்தலுக்கு ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்.

- மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தொடர்பாக நடைபெறும் அனைத்துக் கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளையும் ஆவணப்படுத்த வேண்டும். (உ.ம்– வருகைப் பதிவேடு, புகைப்படம் மற்றும் கூட்ட நடவடிக்கைகள்).





## முதலீட்டு திட்டம்

கிராம முதலீட்டு திட்டம் > வட்டார முதலீட்டு திட்டம்

வட்டார முதலீட்டு திட்டம் > மாவட்ட முதலீட்டு திட்டம்

மாவட்ட முதலீட்டு திட்டம் > மாநில முதலீட்டு திட்டம்

கிராம முதலீட்டு திட்டங்கள் தொகுக்கப்பட்டு, வட்டார முதலீட்டு திட்டம் உருவாக்கப்படும். வட்டார அளவிலான முதலீட்டு திட்டங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மாவட்ட முதலீட்டு திட்டம் உருவாக்கப்படும். மாவட்ட திட்ட முதலீட்டு திட்டங்களை தொகுத்து மாநில முதலீட்டு திட்டம் வருவாக்கி செயல்படுத்தப்படும்.

## திட்ட வழிமுறைகள்

